ஆறே மாசம்.. நாடே நாசம்..!

க்யூட் சி.எம். என்று விஜய்யை பாராட்டியவர்களும், விசில் சின்னத்துக்கு வாக்களித்தவர்களும் புலம்புகிற சத்தம் தமிழ்நாடெங்கும் கேட்கிறது. பண்டிகை நாட்களில்கூட நிம்மதியாக வாழ முடியாத நிலையில் மக்கள் பரிதவிக்கிறார்கள்.

மனிதருக்கு அடிப்படைத் தேவை உணவு. நெற்களஞ்சியமான தஞ்சை மாவட்டம் தரிசாகக் கிடக்கிறது. குறுவைப் பயிரின் சாகுபடி பரப்பு பாதியாகக் குறைந்துவிட்டது. சம்பா பயிருக்குத் தேவையான தண்ணீர் இல்லாததால், நேரடி நெல் விதைப்பு என்ற சோதனைக் கட்டத்திற்கு விவசாயிகள் தள்ளப்பட்டிருக்கிறார்கள். 5 கோடி ரூபாய் செலவு செய்து பயணித்து, மேட்டூர் அணையைத் திறந்து வைத்த முதல்வர் விஜய், டெல்டாவில் வாடும் பயிர்களைப் பற்றிக் கவலைப்படாமல் இருக்கிறார். விவசாயக் கடன்களை முழுமையாகத் தள்ளுபடி செய்வதாக வாக்களித்துவிட்டு, அரைகுறை அறிவிப்புகளை மட்டுமே வெளியிட்டார். பயிர்க் காப்பீட்டுத் தொகைக்கூட கிடைக்காமல் விவசாயிகள் தவிக்கிறார்கள்.

திராவிட மாடல் ஆட்சியில் வேளாண்மை மீதான தனி அக்கறையினாலும், சிறப்பான நீர் மேலாண்மையினாலும் டெல்டா மாவட்டங்களில் சாதனை அளவில் நெல் உற்பத்தி செய்யப்பட்டது. த.வெ.க ஆட்சியின் அலட்சியத்தால் நெற்களஞ்சிய விவசாயிகள் கண்ணீரில் மிதக்கிறார்கள். உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்குக் கூட மிஞ்சாது என்ற பழங்கதையைப் புதுப்பித்திருக்கிறது விஜய் அரசு. உழவர்கள் மட்டுமல்ல, உண்பவர்களும் கண்ணீருடன் கணக்குப் பார்க்கும் நிலை தான் தமிழ்நாட்டில் உள்ளது.

6 மாத கால ஆட்சியில் அனைத்து வகையான அத்தியாவசியப் பொருட்களின் விலையும் உயர்ந்துவிட்டது. ஒரு கிலோ அரிசி விலை, முன்பைவிட 30 ரூபாய் உயர்ந்து, கிலோ 100 ரூபாய் என்ற நிலையை நெருங்கிக் கொண்டிருக்கிறது. தரமான அரிசியை விலை கொடுத்தாலும் வாங்க முடியாத நிலை உள்ளது. த.வெ.க அரசோ இதையெல்லாம் கண்டுகொள்ளாமல், கூட்டுறவு அங்காடிகளில் சன்னரக பொன்னி அரிசி ஒரு கிலோ 30 ரூபாய்க்கு விற்பனை செய்வதாகத் தம்பட்டமடித்தது. 100 ரூபாய்க்கு நல்ல அரிசி கிடைக்காத நிலையில், 30 ரூபாய்க்கு பொன்னி அரிசியா என்ற எதிர்பார்ப்புடன் சென்ற மக்களுக்கு ஏமாற்றம்தான் மிஞ்சியது.

தமிழ்நாட்டில் அரிசி அட்டைதாரர்களுக்கு ரேஷன் கடை மூலம் 20 கிலோ அரிசி வழங்கப்படுகிறது. முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சிக்காலத்தில் 2006ஆம் ஆண்டு செப்டம்பர் 15ஆம் நாள் ஒரு கிலோ அரிசி 2 ரூபாய் என்ற விலைக்கு வழங்கும் திட்டத்தைத் தொடங்கினார். பின்னர், அதை கிலோ 1 ரூபாய் என்று குறைத்தார். பிறகு வந்த ஆட்சியில் அந்த விலையையும் நீக்கம் செய்ததால், ஒவ்வொரு குடும்பத்திற்கும் 20 கிலோ அரிசி கட்டணமில்லாமல் வழங்கப்பட்டு வருகிறது. திராவிட நாயகரான கழகத்தலைவரின் திராவிட மாடல் ஆட்சியிலும் 20 கிலோ அரிசி தடையின்றி வழங்கப் பட்டது.

மக்களுக்கு கட்டணமில்லாமல் வழங்கப்படும் ரேஷன் அரிசியை பாலீஷ் செய்து, சன்னரக பொன்னி என்று ஏமாற்றி, கூட்டுறவு அங்காடிகளில் 30 ரூபாய்க்கு விற்பனை செய்த மோசடிக் கூட்டம்தான் த.வெ.க. ஆட்சியினர். பொன்னி அரிசி என நம்பி, விலை கொடுத்து வாங்கிய பொதுமக்களே மாவட்ட ஆட்சியர்களிடமும், அதிகாரிகளிடமும், "இது பாலீஷ் போடப்பட்ட ரேஷன் அரிசி" என்று முறையிட்ட வேதனைக் காட்சிகளைத் தமிழ்நாடு பார்த்தது.

எதிர்க்கட்சித்தலைவரான கழக இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இது குறித்து த.வெ.க. அரசுக்கு சவால் விடும் கேள்விகளை எழுப்பினார். கூட்டுறவு அங்காடிகளில் வழங்கப்படுவதாகச் சொல்கின்ற சன்னரக பொன்னி அரிசி எங்கிருந்து கொள்முதல் செய்யப் பட்டது? கொள்முதல் செய்வதற்கான டெண்டர் எப்போது விடப்பட்டது? என்ன விலைக்கு ஒரு கிலோ அரிசி வாங்கப்பட்டது? மக்களுக்கு ஒரு கிலோ அரிசிக்கு கொடுக்கப்படும் மானியம் எவ்வளவு? **என போலி பொன்னி அரிசி விற்பனை குறித்து அடுக்கடுக்கானக் கேள்விகளை எதிர்க்கட்சித்தலைவர் எழுப்பி, மூன்று வாரங்கள் கடந்த நிலையிலும், விஜய் அரசிடமிருந்து முறையான பதில் எதுவும் வர வில்லை.**

நம்பி வாக்களித்த மக்களின் வயிற்றில் அடித்திருக்கிறார் விஜய். த.வெ.க எம்.எல்.ஏ.க்கள் தங்களிடம் புகார் மனு கொடுக்க வருபவர்களையும் அடிக்கிறார்கள். துணை சபாநாயகர் ரவிசங்கர் நேரடியாக ஒருவரைத் தாக்குகின்ற காட்சி தீபாவளி ரிலீசாக வெளியானது. தாக்கப் பட்ட நபரை சமாதானப்படுத்துவது போல ஒரு போலி வீடியோ, அது 6 டேக் எடுக்கப் பட்டபிறகு வெளியான வீடியோ என்றும் என்னை சபாநாயகர் அடித்தார் என்றும் தாக்கப்பட்டவர் வெளியிட்ட அடுத்த வீடியோ, தாக்கிய சபாநாயகர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்காமல், தாக்கப்பட்ட நபர் டாஸ்மாக்கில் மது வாங்குவது தொடர்பான சி.சி.டி.வி வீடியோவை வெளியிட்டு பாதிக்கப்பட்டவரையே குற்றவாளியாகச் சித்தரித்த காவல்துறை என்று **ஒரு விவகாரத்தை திசை திருப்பவும், மடைமாற்றவும் அத்தனை அதிகாரத்தையும்தான் பயன்படுத்துகிறது த.வெ.க அரசு. நேர்மையான விசாரணையோ நடவடிக்கையோ இல்லை.**



கோவி.லெனின்
தி.மு.க .தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர்

திருவைகுண்டம் த.வெ.க. எம்.எல்.ஏ. சரவணன் மீது அவரது கட்சியைச் சேர்ந்த பெண்மணி பாலியல் புகார் கொடுத்தார். பாதிக்கப்பட்டவருக்கு நீதி கிடைக்கச் செய்யும் நடவடிக்கை இல்லை. மாறாக, இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட மற்ற குற்றவாளிகளுடன் சமரசம் செய்துவைக்கும் கட்டப்பஞ்சாயத்து வேலையை த.வெ.க அரசின் காவல் துறை மேற்கொண்டது. இராணிப் பேட்டை த.வெ.க மாவட்டச் செயலாளர், அரக்கோணம் ஒன்றிய த.வெ.க செயலாளர் உள்ளிட்டோர் மீது சொந்தக் கட்சியைச் சேர்ந்த பெண்களே பாலியல் துன்புறுத்தல்கள் குறித்து புகார் தெரிவித்த போதும் இதுவரை எந்த நடவடிக்கையையும் விஜய் அரசு மேற்கொள்ள வில்லை.

சோப்பளாங்கி அரசு என கழகத் தலைவரால் வர்ணிக்கப்பட்ட விஜய் அரசு, 'தான் சோப்பளாங்கிதான்... சோப்பளாங்கிதான்" என்று ஒவ்வொரு நாளும் நிரூபித்துக் கொண்டே இருக்கிறது. சொந்தக் கட்சியைச் சேர்ந்த பெண்களுக்குப் பாலியல் தொல்லை கொடுத்தாலும் காவல்துறையைக் கையில் வைத்திருக்கும் முதலமைச்சர் விஜய் நடவடிக்கை எடுக்க மாட்டார் என்ற தெனாவெட்டால், மாவட்ட ஆட்சியரான பெண் ஐ.ஏ.எஸ். அதிகாரிக்கே ஆபாச குறுஞ்செய்தி அனுப்பி இருக்கிறார் கள்ளக்குறிச்சி த.வெ.க எம்.எல்.ஏ.

6 மாதங்களில் தமிழ்நாட்டில் அனைத்து வகையான சீரழிவுகளும் பெருகிவிட்டன. சர்வதேச அளவிலான மெத்தபெட்டமைன் போதைப் பொருள் கடத்தலில் ஒன்றிய அரசின் அமைப்புகளால் கைது செய்யப்பட்டிருக்கிறார் நாகை மாவட்ட த.வெ.க நிர்வாகி. அமைச்சர் ஒருவரே மாத்திரையைப் பவுடராக்கும் வீடியோ வைரலானது. அவரைப் பக்கத்தில் அழைத்து நிறுத்தி, 'போஸ்' கொடுத்தார் விஜய். "பத்தாது பாட்டில் நான் குடிக்க.. அண்டாவைக் கொண்டா சியர்ஸ் அடிக்க" என்ற தத்துவப் பாடலைப் பாடி ஆடியவரிடம் வேறு என்ன எதிர்பார்க்க முடியும்?

அமைச்சர்களும் எம்.எல்.ஏ.க்களும் தறிகெட்டு ஆடுவதை நிறுத்த முடியாத விஜய்யால், பொதுமக்களின் நம்பமதியான வாழ்க்கைக்கும் உத்தரவாதமளிக்க முடியவில்லை. தமிழ்நாட்டின் வரலாற்றில் 30 ஆண்டுகள் கழித்து சிறையிலிருந்து கைதிகள் தப்பி ஓடுவது தொடர்ந்து கொண்டிருக்கிறது. கைதிகள் சுதந்திரமாக இருப்பதால், மக்கள் பதற்றத்தில் இருக்கிறார்கள்.

தீபாவளி பண்டிகை நாளில் மட்டும் 17 கொலைகள் தமிழ்நாட்டில் நடந்துள்ளன. தெருவில் பட்டாசு வெடித்து ரீல்ஸ் எடுத்த வர்களைக் கண்டித்த தேனி சிறப்பு சப் இன்ஸ்பெக்டரை அடித்தே கொலை செய்திருக்கிறது போதைக் கும்பல். சென்னை அருகே செங்குன்றத்தில் போலீஸ்காரரை ஒரு ரவுடி பட்டாக்கத்தியால் வெட்டுவதையும், பாதுகாப்புக் கருவிகளின்றி பெல்ட்டால் தடுத்து தன் உயிரைப் பாதுகாத்துக் கொள்வதையும் பதற்றத்துடன் பார்த்தது தமிழ்நாடு. நெல்லை மாவட்டம் தாழையூத்தில் காவல் அதிகாரியின் கையை வெட்டிய ரவுடியின் செயல், த.வெ.க ஆட்சியில் அதிகாரம் யார் கையில் இருக்கிறது என்ற அச்சத்தை ஏற்படுத்துகிறது.

முரசு புயலில் சிக்கி சென்னை காசிமேடு மீனவர்கள் 7 பேர் உயிரிழந்த நிலையில், உடல்களை மீட்டு வருவதில் த.வெ.க அரசு காட்டிய அலட்சியம் மீனவ மக்களைக் கொந்தளிக்கச் செய்திருக்கிறது. ஆறுதல் சொல்வதற்குக்கூட ஜோசியர் நேரம் குறித்து தரவேண்டும் என்பது போல அமைச்சர்கள் தாமதமாக வந்து போனார்கள். காவல்துறையோ உயிரிழந்த மீனவர்கள் மீதும் அவர்களின் குடும்பத்தினர் மீதும் வழக்குப் பதிவு செய்து அதிர வைத்தது.

பண்டிகை நாட்களில் கொலைகள் நடப்பது ஏதோ விளையாட்டுப் போட்டி என்பது போல அலட்சியமாகப் பதில் சொல்கிறார் அமைச்சர் ராஜ்மோகன். விலை அதிகம் கொடுத்தும் நல்ல அரிசி கிடைக்கவில்லை என்று மக்கள் சொன்னால், பொன்னி அரிசி சாப்பிடுவது ஒரு ஸ்டேட்டஸ் என நக்கலடிக்கிறார் அமைச்சர் வெங்கட்ராமன். மின்சாரத்தை மிக அதிக விலைக்கு கொள்முதல் செய்து சிக்கியிருக்கும் அமைச்சர் நிர்மல்குமார் அன்றாடம் பொய் மூட்டைகளை அவிழ்த்து விடுகிறார். புளுகுவதில் அமைச்சர் நிர்மல்குமாருக்கும் அமைச்சர் ஆதவ் அர்ஜூனாவுக்கும் இடையே கடும் போட்டியே நடக்கிறது.

விஜய் உள்பட அத்தனை பேரும் தி.மு.க மீது பழிபோடுவதை மட்டுமே கொள்கையாக வைத்துள்ளனர். தங்கள் ஆட்சியில் நடக்கும் எந்த ஒரு முறைகேடுக்கும், சட்டம்ஒழுங்கு சீரழிவுக்கும் பொறுப்பேற்பதில்லை. மக்களின் குமுறல்களைக்கூட காது கொடுத்துக் கேட்பதில்லை. தொழில் வளர்ச்சிபொருளாதார மேம்பாடு உள்ளிட்ட அனைத்திலும் 6 மாதத்தில் தமிழ்நாடு மோசமாக வீழ்ச்சியடைந்துள்ளது. ஆறே மாதத்தில் தமிழ்நாடே நாசம் என்பதுதான் விஜய்யின் நிர்வாகத் திறன்.

தேவகோட்டையில் - வே.ருசோ 28வது ஆண்டு நினைவு தினம்!

கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் தி.மு.க.வினர் மலர் அஞ்சலி!

சிவகங்கை. நவ. 13 -

சிவகங்கை மாவட்ட முன்னாள் இளைஞர் அணி அமைப்பாளர் வே.ருசோ. தேவகோட்டையை சேர்ந்தவர். இவர் கடந்த 8.11.2001ம் ஆண்டு மறைவெய்தினார்.

நினைவு தினம். ஒவ்வொரு ஆண்டும் சிவகங்கை மாவட்ட கழகம் மற்றும் ருசோ குடும்பத்தினர் சார்பில் அனுசரிக்கப்படுகிறது. இந்த ஆண்டு 8ம்தேதி தீபாவளியை முன்னிட்டு கடந்த 9 தேதி நினைவு தினம் அனுசரிக்கப்பட்டது.

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை தியாகிகள் பூங்காவிலிருந்து முன்னாள் அமைச்சர் சிவகங்கை மாவட்டக் கழகச் செயலாளர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் மாவட்டக் கழக துணை செயலாளர் திருமதி ஜோன்ஸ் ருசோ, முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் ஆகியோர் முன்னிலையில் அமைதிப் பேரணி நடைபெற்றது .

அமைதி பேரணி சுமார் 2 கிலோ மீட்டர் வரை சென்று ருசோவின் நினைவிடத்தில் ராம் நகரில் முன்னாள் அமைச்சர் சிவகங்கை மாவட்ட கழகச் செயலாளர் கே ஆர்.பெரியகருப்பன் மலர் வளையம் வைத்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

அவரை தொடர்ந்து முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், மாவட்டக் கழக துணை செயலாளர் திருமதி ஜோன்ஸ் ருசோ, மகன் நடிகர் ஆண்டணிநிஷாந்த், மகள் ஜெம்மி நிமிலா, மருமகன் ராஜா ஸ்டீபன் மருமகள் சினேகா கேத்தரின், பேரன்கள் ஆர்.ருசோ, அ.ருசோ மற்றும் உறவினர்கள் ஆகியோர் மலர்வளையம் வைத்து, மரியாதை செலுத்தினார்கள்.

அதைத்தொடர்ந்து மாநில செய்தி தொடர்பு இணைச் செயலாளர் மருது அழகுராஜ், மாவட்ட கழக துணைச் செயலாளர் த.சேங்கைமாறன் முன்னாள் எம்.எல்.ஏ. சுப. மதியரசன், மாவட்ட இளைஞரணி அணிப்பாளர் நாகனி செந்தில்குமார், நகர் கழகச் செயலாளர்கள் பெரி. பாலா, க.பொன்னுசாமி, காரைக்குடி மாநகரச் செயலாளர் மேயர் நா. குணசேகரன், ஒன்றிய செயலாளர்கள் நாகனிரவி, வே.பூ பாலசிங்கம், லெ.மு. ரவிச் சந்திரன், சுப.சின்னத்துரை, நா. நெடுஞ்செழியன், சண்முக வடிவேல், திருமலை முத்துராம லிங்கம், துரை, ராஜா மணி, ஆ.முத்துச் சாமி, யோக. கிருஷ்ண குமார்,

மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணிஅமைப் பாளர் கே. எஸ். நாராயணன் மாவட்ட மாணவ ரணி அமைப்பாளர் கதி. ராஜ்குமார் மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திரு மதி பவானி கணேசன், மாவட்ட மகளிர் அணித் தலைவர் திருமதி எஸ். மணிமேகலை நிர்வாகிகள் மார்க் ரெட் கமலா, முன்னாள் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சீ. ரவி, மாவட்ட நெசவாளர்ணி அமைப்பாளர் எம். முருகானந்தம் பொதுக்குழு உறுப்பினர்கள். ஜெ. மதார் சேட், கரு.அசோகன், ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் பொருள்களின் அன்புச் செல்வன், ஒன்றிய துணை செயலாளர் எஸ். முத்துகுமார், அழகேசன், வக்கீல் தங்கம், பாலகிருஷ்ணன், பூவந்தி பன்னீர், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பரணிகிட்டு, சார்லஸ், ஆரோக்கியம், இலக்கிய அணி அழகையா, ஜெ. ஜாகிர் உசேன், தா. சரவணன், பெரி. சொர்ணலிங்கம், அசோக், சரவணன், ஏ ஆர் .எழில்மாறன், பி. ஆர். எஸ்.பாண்டியன், சங்கரானந்த், மனோ பிரகாஷ், சதீஷ், செலுவத்தி பிரபு, மகளீரணி ராஜலட்சுமி கணேஷ், ராஜாத்தி, பாண்டியம்மாள், முன்னாள் கவுன்சிலர் இளங்கோ,

நகர் மன்ற உறுப்பினர்கள் சிவசாமி, பிச்சை யம்மாள், ஷேக் அப்துல்லா, கே.ரவி, வெள்ளையன், ஆர். பாண்டி, காளிதாஸ், ராஜா. முகமது, அப்துல் ஜபார், அருளரசு, தொ.மு.ச .செல்வம், கார்த்தி, முரசொலி எம்.கே .சேட், ராமதாஸ் காசி, பன்னீர், நாகநாதன், பாஸ்கரன், அந்தோணி , ராஜ்குமார், அசோகன், வெள்ளையன் உட்பட மாவட்டம் முழுவதிலுமிருந்து நிர்வாகிகள் மலர் அஞ்சலி செலுத்தினார்கள்.

அதனைத் தொடர்ந்து அன்னதானம் வழங்கப்பட்டது. நினைவு தின நிகழ்ச்சி ஏற்பாடுகளை சிவகங்கை மாவட்ட கழகம் மற்றும் ஜோன்ஸ் ருசோ தலைமையிலான அவரது குடும்பத்தினர் செய்திருந்தார்கள்.



பண்ருட்டி நகர தி.மு.க. சார்பில் பண்ருட்டி முன்னாள் எம்.எல்.ஏ. மிசா ஏ.மணி அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு 11.11.2026 புதன்கிழமை காலை 9 மணியளவில், பண்ருட்டி நகராட்சி அலுவலகத்துக்கு வெளியில் உள்ள அவருடைய திருவுருவச் சிலைக்கு, பண்ருட்டி நகர மன்ற தலைவர், நகர கழக செயலாளர் க.இராஜேந்திரன் தலைமையில், கடலூர் மேற்கு மாவட்ட கழக அவைத் தலைவர் டாக்டர் கொ.நந்தகோபாலகிருஷ்ணன் முன்னிலையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் அண்ணாகிராம ஒன்றிய கழக செயலாளர் வி.கே.வெங்கட்ராமன், நெல்லிக்குப்பம் நகர கழக செயலாளர் ப.மணிவண்ணன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள், மூத்த முன்னோடிகள். நகர மன்ற உறுப்பினர்கள், வார்டு செயலாளர்கள், கழகத்தின் அனைத்து சார்பு அணி நிர்வாகிகள், கழகத் தோழர்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

84வது வட்டக் கழக முன்னாள் செயலாளர்

திருவல்லிக்கேணி கே.ராஜ் மறைவு!

கழகத்தினர் மலரஞ்சலி!

சென்னை, நவ. 13 –

சேப்பாக்கம் பகுதி, 84வது வட்டக் கழக முன்னாள் செயலாளர் கே.ராஜ் நேற்று (12.11.2026 – வியாழக்கிழமை) 12 மணிக்கு மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

1984. வட்டக் கழக செயலாளர் (84 வட்டம்),

1989 முதல் மாவட்ட பிரதிநிதி,

2001–2006 .80 வது வார்டு மாமன்ற உறுப்பினர் ,

2016 முதல் இன்று வரை, கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை துணை மற்றும் இணை அமைப்பாளர் பொறுப்பில் இருக்கின்றார்.

கே.ராஜ் அவர்கள் கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கு பெற்றவர். தள்ளாத வயதிலும் கழகம் நடத்தும் அனைத்து நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டவர்.



மறைந்த நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் அ.தி.மு.க.வுக்கு சென்ற பொழுது இவரை அழைத்தார். இவரை அச்சரப்பாக்கம் சட்ட மன்ற உறுப்பினராக ஆக்குகிறேன் என்ற பொழுதும் நான் கழகத்தை விட்டும் கலைஞரை விட்டும் வரமாட்டேன் என்று உறுதியோடு நின்றவர் என்று குறிப்பிடத்தக்கது.

தகவல் அறிந்ததும் கழகத்தினர் ஏராளமானோர் அன்னாரது உடலுக்கு மலரஞ்சலி செலுத்தினர்.

மக்கள் ஆட்சி மாண்பு காவா அரசு அரசன்று?

1.

கொலைகொள்ளை நடப்பதனைக் கண்டும் காணா
கொற்றத்தில் வீற்றிருக்கும் அரசும் தேரா
நிலையுற்றே இருக்குமெனில் அரசா சொல்க?
நிருவாக மாவட்ட ஆட்சி தன்னில்
நலமோங்கப் பணியாற்றும் மங்கை யர்க்கே
நாட்முடன் பாலியலைத் தூண்டும் செய்தி
நிலமாளும் சட்டமன்ற உறுப்பாய் உள்ளோன்
விழைவுடனே அனுப்புவது வெட்கம்! வெட்கம்!

2.

நாடுகாக்கும் காவலரைப் பணியின் போது
நாடாளும் கட்சியினைச் சார்ந்தி ருப்போன்
கோடழிக்கும் கருவியினால் கொலையே செய்தல்
கொற்றத்தை ஆள்வதூஉம் அரசே அன்று !
வாடுதுன்பக் குறைசொல்ல நாடிச் சென்ற
வாக்களித்த மாந்தனையே தாக்கு வோனும்
நாடவையின் துணைத்தலைவன் என்றால் ஆட்சி
நாட்டாட்சி மாண்பற்ற காட்டான் ஆட்சி !

(கோடழிக்கும்:: மரம்வெட்டும்)

புலவர்
பழ தமிழாளன்,
இயக்குநர்,
பைந்தமிழியக்கம்,
திருச்சிராப்பள்ளி.

